TNMD01-004972-2024

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**S.C.No.356/2024**
**Prosecution Witness P.W.1**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. பால்ராஜ் | Calling | : லோடுமேன் |
| Father's Name | : திரு. செல்வராஜ் | Religion | : இந்து |
| Village | : மதுரை | Age | : 44 |
| Taluk | : மதுரை | | : |

நாள் : 12.08.2026.

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் தெப்பக்குளம் புதுமீனாட்சி நகரில் குடியிருந்து வருகிறேன். நான் மாட்டுத்தாவணி மார்க்கெட்டில் லோடுமேனாக வேலை செய்து வருகிறேன். கடந்த 2022ம் வருடம் 10வது மாதம் தேதி ஞாபகமில்லை, கீழவாசல் பஸ்ஸ்டாப்பில் காலை 6.00 மணியளவில் நின்று கொண்டிருந்த போது, பக்கத்தில் குமார் என்ற ஒருவர் பஸ்ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தார். அவர் கையில் தங்ககாசு வைத்திருந்தார், அதை யாரோ ஒருவர் பிடுங்கி கொண்டு ஓடிவிட்டார். காசை பிடுங்கி சென்ற நபர் யார் என்று எனக்கு தெரியாது. அதன்பிறகு மேற்படி குமார் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள நபர் யார் என்று தற்போது என்னால் அடையாளம் காட்ட முடியாது. புகார் கொடுக்க நானும் கூட சென்றேன். போலிசார் என்னை விசாரித்தார்கள், விசாரித்த போது மேற்படி விபரங்களை சொன்னேன்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

போலிசார் விசாரித்த போது கடந்த 14.10.2022 காலை 6.00 மணியளவில் நானும், எனது நண்பர் ராம்குமார் என்பவரும் கீழவாசல் பஸ்ஸ்டாப் அருகில் சென்று கொண்டிருந்த போது, பின்னால் பெயர் கேட்டு தெரிந்த குமார் என்பவரை பின்னால் பெயர், விலாசம் கேட்டு தெரிந்த உஸ்மான்அலி என்பவர் குமாரை வழிமறித்து நான் ஏரியாவில் பெரிய ரவுடி என்று மிரட்டினார் என்றும், அதற்கு குமார் போலிசில் சொல்லிவிடுவேன் என்று மிரட்டியதற்கு இந்த ஏரியாவில் என்னை உஸ்மான்அலி என்று என்னைப் பற்றி கேட்டுப்பார் நெல்பேட்டை ஏரியாவே நடுங்கும் நேற்று கூட ஸ்டேசனுக்கே போய் மிரட்டிவிட்டு வந்தவன்டா என்று சொல்லி தீபாவளிக்கு தண்ணி அடிக்க எனக்கு காசு வேண்டும் என்றும் கையில் இருக்குற காசை மரியாதையாக எடுத்து கொடுடா என்று சொல்லிக் கொண்டே அவர் இடுப்பில் வைத்திருந்த கத்தியை எடுத்து குமாரின் நெஞ்சில் வைத்து அழுத்தி அவரது மேல்சட்டைப்பையில் வைத்திருந்த ஒரு கிராம் தங்ககாயினை கொள்ளையடித்து பறித்துக் கொண்டார் என்றும், அப்போது குமார் பயத்தில் காப்பாற்றும்படி அலறியவுடன் அந்த வழியாக தற்செயலாக வந்த நானும், ராம்குமாரும் குமாரை காப்பாற்ற வந்த போது உஸ்மான்அலி கையில் வைத்திருந்த கத்தியை நாலாபுறமும் சுழற்றி காட்டி என்னை யாராவது பிடிக்க வந்தீங்கன்னா உங்களை கொல்லாமல்விடமாட்டேன் என மிரட்டினார் என்றும், அப்போது அந்தவழியாக வந்தவர்கள் தங்கள்

இருசக்கரவாகனத்தை திருப்பி கொண்டு வந்த வழியே திரும்பி போய்விட்டார்கள் என்றும், கடைக்காரர்கள் பயந்து போய் கடையை பூட்டிவிட்டு சென்றுவிட்டார்கள் என்றும், நாங்களும் பயந்துவிட்டோம் என்றும் பின்பு எதிரி உஸ்மான்அலி சர்வசாதாரணமாக குமாரிடம் பறிந்த தங்ககாயினுடன் நடந்து போய்விட்டார் என்றும், அதன்பிறகு குமார் போலிசில் வந்து புகார் கொடுத்தார் என்றும் சொல்லியுள்ளேன் என்றும், தற்போது எதிரிக்கு பயந்து கொண்டு உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-*****3

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

Sd./- M.Saisaravanan,

முதன்மை மாவட்ட நீதிபதி,

மதுரை.